1995 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணபுமிகு உறுப்பினர் கேட்ட கேள்வி ஒரு பணிமனை பார்த்திபனூரில் அமைக்க முடியுமா என்று கேட்டார்கள். அது இல்லை என்று நான் சொன்னேன். கட் சர்வீஸ் வேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு மிக விரைவாக அந்தப் பகுதிக்கு கட் சர்வீஸ் விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட் சர்வீஸ் பேருந்து அங்கு விடப்படும் என்று அமைச்சர் கூறினார்கள். அதற்காக நான் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நாளையதினம் நமது மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் என்னுடைய ராமநாதபுர மாவட்டத்திற்கு முதுகுளத்தூருக்கு வருகை தந்து 6 பேருந்து வழித் தடங்களை துவக்குவதற்கும், வரியில்லாத நம்முடைய இந்த பட்ஜெட்டை அந்தப் பகுதி மக்களுக்கு விளக்குவதற்கும் வருகை தர இருக்கிறார்கள். அதற்காக, மாண்புமிகு அமைசசர் அவர்களை என்னுடைய தொகுதி மக்களின் சார்பில், மாவட்ட மக்களின் சார்பில் வரவேற்கின்ற இந்த நல்ல வேளையில், அங்கே வருகின்ற அமைச்சர் இந்த வழித்தடத்தை ஆரம்பிக்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளை மனதிலே கொண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஒப்புதலோடு நாளை அந்தப் பேருந்தை அந்தப் பகுதியிலே இயக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 486, திரு. வெ. தமிழரசு. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

486—

பைத்தூர் சாம்பக்காடு பகுதியில் ஏரித் திட்டம்

9455*—திரு. வெ. தமிழரசு:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[*1995 ஏப்ரல் 28*

(அ) பைத்தூர் சாம்பக்காடு பகுதியில் ரூ. 102 லட்சம் மதிப்பீட்டில் ஆய்வு செய்யப்பட்ட ஏரித் திட்டம் தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

(ஆ) எப்பொழுது இத்திட்ட வேலை தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் *(ஆ)*: இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

முற்பகல் *10-15*

திரு. வெ. தமிழரசு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சாம்பக்காடு ஏரி அமைக்கும் இடம் பத்தூர் மலைக்கும் வானாபுரம் மலைக்கும் இடையே உள்ளது. இத்திட்டத்தினால் பல நூற்றுக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் விவசாயம் செய்கின்ற நல்ல வாய்ப்பு உள்ளது. மேலும் மலைவாழ் மக்கள் நலன் கருதி இந்தப் பகுதிக்கு இந்த ஆண்டே அமைக்கின்ற திட்டம் நம்முடைய ஆற்றல்மிக்க அறிவுக்கூர்மை மிக்க மின்வெட்டே இல்லாத அளவுக்கு சிறந்த நிர்வாகம் செய்யும், வெட்டிவா என்றால் கட்டிவரும் ஆற்றல்மிக்க அமைச்சர் அன்பு தளபதி மாண்புமிகு அமைச்சர் . அவர்கள் நிறைவேற்றுவாரா என பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம் சாம்பக்காடு அருகில் ஒரு ஏரி அமைக்கின்ற திட்டத்திற்கு *1989—90* விலை விகிதப்படி ஒரு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. அதிலே பெனிஃபிட் காஸ்ட் ரேஷியோ குறைவாக இருந்த காரணத்தினாலே பயன் விகிதாச்சாரம் அந்தத் திட்டத்தை ஒத்திப்போடுகின்ற சூழ்நிலை ஏற்பட்டது. இருந்தாலும் மறுபடியும் அந்தத் திட்டத்தினுடைய முக்கியத்துவம் கருதி *1994—95* ஆம் ஆண்டுக்கு மதிப்பீடு செய்ததில் *1* கோடியே *87* இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இதனுடைய பயன் செலவு விகிதாச்சாரத்தை வேளாண்மை, மீன் வளர்ப்பு, வன வளர்ப்பு, வேலைவாய்ப்பு ஆகிய பயன்களை கருத்தில் கொண்டு தற்போது *1:02:1* என்று தயாரிக்கப்பட்டுள்ளது. பயன் விகிதாச்சாரமும் இப்போது இருப்பதாக கணக்கிலே எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதனுடைய மதிப்பீடு தலைமைப் பொறியாளர் ப்ளானிங் அண்டு டிஸைன் திட்டம் ஒன்று வடிவமைப்பவர்களுடைய பரிசீலனையிலே இருக்கிறது. பரிசீலனைக்குப்பின் அரசுக்கு விரைவில் தலைமைப் பொறியாளர்

1995 ஏப்ரல் 28]

சமர்பிக்க இருக்கிறார். ஆகவே இத்திட்டத்திற்கு ஏறத்தாழ 12.76 ஏக்கர் வன நிலம் கையகப்படுத்த வேண்டியிருக்கிறது. இதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே இந்த ஏற்பாடுகள் எல்லாம் முடிந்தபின் இந்தத் திட்டத்தை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 487, திரு. கு. சீனிவாசன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

487—

மன்னார்குடியில் நெடுஞ்சாலையைப் புதுப்பித்தல்

22642*—திரு. கு. சீனிவாசன்:**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி நகரிலிருந்து பெருகவாழ்ந்தான் சித்தமல்லி, முத்துப்பேட்டை செல்லும் நெடுஞ்சாலை பழுதடைந்த நிலையில் உள்ளதாலும், ஆற்றுக் கரையிலேயே செல்வதாலும் பேருந்து போக்குவரத்துக்கு ஏற்ப புதுப்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திட்டம் நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மன்னார்குடி-முத்துப்பேட்டை சாலை கிலோமீட்டர் 0/34 முழுவதும் மேம்படுத்துவதற்கான திட்டப்பணி 3 கோடியே 74 இலட்சம் ரூபாய் திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு விரைவில் முடிப்பதற்காக அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. அந்தப் பணிகள் தொடங்கி விரைவில் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. சீனிவாசன்: பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி–முத்துப் பேட்டை சாலை நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு விரைவிலே முடிக்கப்படும் என்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அவர்கள் அறிவித்ததைப் போல இன்றைக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு அந்த 34 கிலோமீட்டரிலே 20 கிலோமீட்டர் டெண்டரும் விடப்பட்டிருக்கின்ற காரணத்தினால்